முதல்வர் கோப்பைக்கான, கையுந்துப் பந்து போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற ஈரோடு மாவட்ட அணி மாணவியருடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர்.

முதல்வர் கோப்பை கையுந்து பந்து போட்டி

குமுதா பள்ளி மாணவியர் இடம்பெற்ற ஈரோடு அணிக்கு வெண்கலப் பதக்கம்

● ஈரோடு

முதல்வர் கோப்பைக்கான மாநில அளவிலான கையுந்துப் பந்து போட்டிகள் சென்னையில் நடந்தன. இதில், ஈரோடு மாவட்ட அணி, கால் இறுதிப் போட்டியில், கிருஷ்ணகிரி மாவட்ட அணியை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.

வெற்றி பெற்ற ஈரோடு அணியைச் சேர்ந்த மாணவியருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதக்கமும், பரிசுத்தொகையாக தலா ரூ.25 ஆயிரம் வீதம், அணிக்கு ரூ.3 லட்சம் ரொக்கப் பரிசும் வழங்கினார்.

இந்நிகழ்வில், சிறப்பு மேலாளர் மாலதி, மைதான அதிகாரி வெங்கடேசன், விளையாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, துணைப் பொது மேலாளர் ரெஜினா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் ஈரோடு மாவட்ட கையுந்துப் பந்து பயிற்சியாளர்கள் ஆகியோரும் பங்கேற்று, வெற்றி பெற்ற மாணவியரை பாராட்டினர்.

வெண்கலப்பதக்கம் வென்ற ஈரோடு கையுந்துப் பந்து அணியில் குமுதா பள்ளி மாணவியர் 5 பேர் இடம் பெற்றுள்ளனர். பதக்கம் வென்ற மாணவியருக்கு பள்ளி தாளாளர் ஜனகரத்தினம், துணை தாளாளர் சுகந்தி ஜனகரத்தினம், செயலர் அரவிந்தன், இணைச் செயலர் மாலினி அரவிந்தன், முதல்வர் மஞ்சுளா, துணை முதல்வர் வசந்தி உள்ளிட்டோர் பாராட்டுத் தெரிவித்தனர்.

காலநிலை நடவடிக்கை கோரி பசுமைத் தாயகம் சார்பில் 10 லட்சம் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியை சேலத்தில் பாமக எம்எல்ஏ அருள் தொடங்கி வைத்தார். உடன், பசுமைத் தாயகம் மாநில இணை செயலாளர் சத்ரிய சேகர் உள்ளிட்டோர்.

காலநிலை நடவடிக்கை கோரி

பசுமைத் தாயகம் சார்பில் சேலத்தில் கையெழுத்து இயக்கம்

● சேலம்

பூமி வெப்பமடைதலால் வறட்சி, வெள்ளம் என பல்வேறு இயற்கை சீற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றை தடுக்க சென்னையில் வரும் 28-ம் தேதி நடைபெறவுள்ள ஜி-20 நாடுகளின் சுற்றுச்சூழல் காலநிலை நீடித்த வளர்ச்சி மாநாட்டில், காலநிலை நடவடிக்கை கோரி, பசுமைத் தாயகம் சார்பில் 10 லட்சம் கையெழுத்து பெறும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது.

சேலம் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற நிகழச்சியில், பசுமைத்தாயகம் மாநில இணை செயலாளர் சத்ரிய சேகர் தலைமை வகித்தார். மாநில துணைச் செயலாளர் மாது, மாவட்ட நிர்வாகிகள் முத்துக்குமார், பச்சமுத்து, கார்த்தி, சுசீந்திரன், கவுதமன், சிவக்குமார், ராஜா, பூபாலன் கேசவமூர்த்தி, கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மேற்குத் தொகுதி பாமக எம்எல்ஏ அருள், கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். காலநிலை நடவடிக்கை கோரி, பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி கையெழுத்து பெறப்பட்டது.

பசுமைத்தாயகம் ஆலோசகர்கள் கதிர் ராஜரத்தினம் , சதாசிவம், கலைவாணன், ராஜமாணிக்கம், விஜயகுமார், சரவணன், தங்கராஜ், நடராஜன், சிவா, ஈஸ்வரன், சோடா சண்முகம், அண்ணாமலை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆடி அமாவாசை வருவதை முன்னிட்டு

பவானி கூடுதுறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை

● ஈரோடு

ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறையில் பவானி, காவிரி மற்றும் கண்ணுக்கு தெரியாத அமிர்த நதி ஒன்று கூடுவதாக நம்பிக்கை உள்ளது.

இதனால், அமாவாசை நாட்களில் இங்கு முன்னோர்களுக்கு திதி கொடுத்து தர்ப்பணம் செய்வதற்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் வருகின்றனர். இந்த ஆண்டு ஆடி மாதத்தில் இரு அமாவாசைகள் (ஜூலை 17, ஆகஸ்ட் 15) வருகின்றன.

இந்த நாட்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னோருக்கு திதி கொடுத்து தர்ப்பணம் செய்ய பவானி கூடுதுறைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவ வசதி

எனவே, அவர்களுக்குத் தேவையான வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் பவானி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் தியாகராஜன் தலைமையில் நேற்று நடந்தது.

இதில், ஆற்றில் குளிக்கும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியில் தீயணைப்புத்துறை வீரர்களைப் பணியில் அமர்த்துதல், வாகன நிறுத்துமிடங்களை முடிவு செய்து, போக்குவரத்து நெரிசலை தவிர்த்தல், 108 ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும், நகராட்சி நிர்வாகம் மூலம் கூடுதுறை பகுதியில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வது, பொதுமக்களின் பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமராக்களை பொருத்துதல், கூடுதல் போலீஸாரை பணியில் அமர்த்துதல் குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு, இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

தென்னை சார் தொழில்களை உருவாக்கக் கோரி

தேங்காயை உடைத்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

● நாமக்கல்

தென்னை சார்ந்த தொழில்களை உருவாக்க வலியுறுத்தி, திருச்செங்கோடு அருகே மொளசியில் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கம் சார்பில், தேங்காயை சாலையில் உடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்டச் செயலாளர் பி.பெருமாள் தலைமை வகித்தார். விவசாயிகள் பூபதி, ஆதிநாராயணன், நல்லா கவுண்டர், முத்துசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில், 'உரித்த தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.50 வழங்கி, தமிழக அரசே கொள்முதல் செய்ய வேண்டும். கொப்பரைத் தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.140 வழங்க வேண்டும்.

ரேஷன் கடைகள் மூலம் மானிய விலையில் தேங்காய் எண்ணெய் வழங்க வேண்டும்.

தென்னை சார்ந்த தொழில்களை உருவாக்க வேண்டும். தென்னை விவசாயத்தில் பயிர் காப்பீடு மற்றும் விவசாயிகளுக்கும் காப்பீடு செய்ய வேண்டும்' என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் சாலையில் தேங்காயை உடைத்து, கோரிக்கை முழக்கம் எழுப்பினர்.

தென்னை சார்ந்த தொழில்களை உருவாக்க வலியுறுத்தி, திருச்செங்கோடு அருகே மொளசியில், சாலையில் தேங்காயை உடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கத்தினர்.

கூட்டுறவு சங்கங்களில்

உர விற்பனை 25 சதவீதமாக அதிகரிப்பு

டான்பெட் மேலாண் இயக்குநர் தகவல்

● சேலம்

இந்திய அளவிலான உரங்களை விநியோகம் செய்யும் கூட்டுறவு நிறுவனமான இப்கோ நிறுவனம், தமிழக கூட்டுறவு சங்கங்களுக்கு உர விநியோகம் செய்யும் டான்பெட் நிறுவனம் ஆகியவை சார்பில் பயிற்சி கருத்தரங்கு ஏற்காட்டில் நடைபெற்றது.

கருத்தரங்கில், டான்பெட் மேலாண் இயக்குநர் குமார் பேசுகையில், "கடந்த சில ஆண்டுகளில், கூட்டுறவு சங்கங்கள் மூலமான உர விற்பனையானது, 18 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், இதை 30 சதவீதமாக உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. டான்பெட் மூலம் இந்த ஆண்டு சொட்டு நீர் உரங்கள், தென்னை ,வாழை ,நெல் போன்ற பயிர்களுக்கு குறைந்த விலையில் நுண்ணூட்ட உரங்கள் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

இப்கோ நிறுவனத்தின் டெல்லி பொது மேலாளர் (விற்பனை) ரஜ்னீஸ் பாண்டே பேசுகையில், "தமிழகத்தில் டான்பெட் நிறுவனமானது 30 மாவட்டங்களில் 3,000 கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரவிநியோகம் செய்வது பெருமைக்குரியது.

இப்கோ நிறுவனமானது, நவீன நானோ தொழில்நுட்பத்தில் நானோ யூரியா, நானோ டிஏபி உரங்களை இந்திய விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து, சரியான விலையில் விற்பனை செய்து வருகிறது. உர இறக்குமதி நாடான இந்தியாவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைந்து, நானோ உர ஏற்றுமதி நாடாக இப்கோ உருவாக்கியுள்ளது" என்றார்.

சேலம்-நாமக்கல் மாவட்ட இப்கோ மண்டல அலுவலர் அருள்மணி, மாநில விற்பனை மேலாளர் சுரேஷ், டான்பெட் சென்னை பொது மேலாளர்கள், அலுவலர்கள், மண்டல மேலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்கோ மாநில அலுவலர்கள் பழனியப்பன், வர்கீஸ் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்

சுற்றுலா தொழில் செய்வோர் பதிவு செய்வது கட்டாயம்

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல்

● நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் சுற்றுலா தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆன்லைன் மூலம் தங்களின் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நாமக்கல் ஆட்சியர் ச.உமா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உணவு மற்றும் உறைவிட சுற்றுலாத் திட்டம், சாகச சுற்றுலா இயக்குபவர்கள், கூடாரச் சுற்றுலா இயக்குபவர்கள், கேரவேன் சுற்றுலா இயக்குபவர்கள், கேரவேன் பார்க் இயக்குபவர்கள் உள்ளிட்ட சுற்றுலா தொடர்பான தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் https//www.tntourismtors.com என்ற சுற்றுலாத் துறை இணையதளத்தில் தங்களின் விவரங்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்யாமல் இயங்கும் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர் மீது மாவட்ட நிர்வாகம் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பதிவு செய்வது மற்றும் வழிமுறைகள் குறித்த அரசாணையை சுற்றுலாத் துறை இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும், கூடுதல் தகவல் பெற, நாமக்கல் ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் இயங்கி வரும் மாவட்ட சுற்றுலா அலுவலகத்தை அணுகலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் 15 ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை

● ஈரோடு

தக்காளி விலை உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் 15 ரேஷன்கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ 60-க்கு விற்பனை செய்யப்படும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரோடு நேதாஜி காய்கறிச் சந்தை மற்றும் உழவர் சந்தைகளுக்கு தக்காளி வரத்து குறைந்ததால், அதிகபட்சமாக கிலோ ரூ.130 வரை விலை உயர்ந்தது. தக்காளி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், ஈரோடு சம்பத் நகர் மற்றும் சத்தியமங்கலம் உழவர் சந்தைகளில் மலிவு விலையில் தக்காளி விற்பனை செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக உழவர் சந்தை மற்றும் ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள 15 ரேஷன்கடைகளில், ஒரு கிலோதக்காளிரூ.60-க்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஈரோடு ஆசிரியர் காலனியில் உள்ள ரேஷன்கடையில் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.60-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு ரேஷன் கார்டுக்கு ஒரு கிலோ என்ற அளவில் தக்காளி விற்பனை நடந்தது. தக்காளி வரத்திற்குஏற்ப,இன்று(13-ம் தேதி) முதல் மீதமுள்ள 14 ரேஷன்கடைகளிலும் கிலோ ரூ.60-க்கு தக்காளி விற்பனை தொடங்கும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:

repsalem@hindutamil.co.in

வியர்க்குதே

நாமக்கல்

- கெட்டிமேட்டில் இன்று மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளது. இதுகுறித்து நாமக்கல் மின்வாரிய செயற்பொறியாளர் சுந்தரராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பு:
  நாமக்கல் அருகே கெட்டிமேட்டில் இன்று (13-ம் தேதி) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளன. எனவே இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கோணங்கிப்பட்டி, பொன்னேரி, காளிசெட்டிப்பட்டி, புதுக்கோட்டை, அ.பாலப்பட்டி, ஈச்சவாரி, பொம்மசமுத்திரம், கெட்டிமேடு, பொட்டிரெட்டிப்பட்டி, பீமநாய்க்கனூர், பெருமாப்பட்டி, தூசூர், கொடிக்கால்புதூர், ரெட்டிப்பட்டி மற்றும் கெட்டிமேடு ஆகிய இடங்களில் மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளது என தெரிவித்துள்ளார்.

கே.ஆர்.தோப்பூர்

- ஓமலூரை அடுத்த கே.ஆர்.தோப்பூர் துணை மின்நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இன்று (13-ம் தேதி) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை, அலையனூர், மாரமங்கலத்துப்பட்டி, காரை சாவடி, முத்துநாயக்கன்பட்டி, இரும்பாலை மோகன் நகர், கலர்பட்டி , தெசவிளக்கு உள்ளிட்ட இடங்களில் மின் விநியோகம் இருக்காது.

நங்கவள்ளி

- நங்கவள்ளி துணை மின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
  எனவே, இன்று (13-ம் தேதி) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நங்கவள்ளி, வனவாசி, வீரக்கல், சூரப்பள்ளி, சோரகை, மானாத்தாள், குப்பம்பட்டி, சீரங்கனூர், மல்லிகுட்டை, பெரிய வனவாசி, செல்லக்கல் உள்ளிட்ட இடங்களில் மின் விநியோகம் இருக்காது, என ஓமலூர் கோட்ட மின்வாரிய செயற்பொறியார் சங்கர சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

RELIGARE Values that bind ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132
பதிவு அலுவலகம்: 1407, 14வது தளம், சிரன்ஜீவி டவர், 43, நேரு ப்ளேஸ், புதுதில்லி-110019
கார்பொரேட் அலுவலகம்: 7வது தளம், மேக்ஸ் ஹவுஸ் ப்ளாக் A, Dr.ஜா மார்க் ஒக்லா பேஸ் III, ஒக்லா இண்டர்ஸ்ட்ரியல் எஸ்டேட், புதுதில்லி-110020
கிளை அலுவலகம்: எண்.79/1A, 2வது தளம், பிரவீன் பிளாசா, சர் சண்முகம் ரோடு, RS புரம், கோயம்புத்தூர்-641002

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]
அசையா சொத்தின் விற்பனைக்கான ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை ஏல விற்பனை செய்தல்.
ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாளபூர்வ சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் 1.செயின்ட் பால்ஸ் எஜிகேஷனல் அண்ட் சாரிடபிள் ட்ரஸ்ட், 2.G.ரூபெல்லா, 3.D.விக்டர்ராஜா பாண்டியன் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான 06.07.2023 அன்றுள்ளபடி ரூ.6,97,70,495.87 (ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று ஏழு லட்சத்து எழுபதாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஐந்து மற்றும் பைசா எண்பத்து ஏழு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 25.08.2023 அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.
அசையா சொத்து விவரம்
சொத்து எண்.1: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5, பட்டா எண்.7 இதில் 2.50 ஏக்கர் நிலம், அதனுடன் கிணறு பகுதி மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: வண்டிப்பாதை, P.A.பழனிசாமிக்கு சொந்தமான தெற்கில் வடக்கு பக்க நிலம், மேற்கு: சின்னசாமி, ஆறுமுகம் குடும்பம்-க்கு சொந்தமான நிலம், தெற்கு: ராஜபாண்டியன் நிலம், வடக்கு: P.A.பழனிசாமிக்கு சொந்தமான நிலம். அளவுகள்: 2.50 ஏக்கர்.
சொத்து எண்.2: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5 மற்றும் புதிய சர்வே எண்.91/2-ல் புஞ்சை ஹெக்டேர் 0.98.5 மொத்தம் புஞ்சை ஹெக்டேர் 7.42.0 பட்டா எண்.7 மற்றும் 157 இதில் 2.50 ஏக்கர் நிலம், கிணறு பகுதி, அதனுடன் 5 HP எலக்ட்ரிக் பம்ப் சென்ட் மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: விற்பவருக்கு சொந்தமான மீதமுள்ள நிலச்சொத்துகள், மேற்கு: ராசப்ப மணியக்காரர், ஆண்டவர் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு: விக்டர் ராஜபாண்டியனுக்கு சொந்தமான நிலம், வடக்கு: எண்ணமங்கலம், பொண்ணுசாமி கவுண்டர் மற்றும் குகலூர் விஷ்ணு கவுண்டர் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம். அளவுகள்: 2.50 ஏக்கர்.
சொத்து எண்.3: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5, பட்டா எண்.7 இதில் 3.00 ஏக்கர் நிலம், கிணறு பகுதி, அதனுடன் 5 HP எலக்ட்ரிக் பம்ப் சென்ட் மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: சின்னசாமி, ஆறுமுகம் மற்றும் மற்றவர்களின் சொத்துக்கு கிழக்கு, பழனிசாமியின் மீதமுள்ள நிலத்திற்கு மேற்கு, மோகனசுந்தரம் மற்றும் சௌந்தரராஜன்-ன் சொத்துக்கு தெற்கு, சண்முகம் மற்றும் மற்றவர்களின் சொத்துக்கு வடக்கு. அளவுகள்: 3.00 ஏக்கர்.
மொத்த சொத்துக்களின் பரப்பு 8.00 ஏக்கர்.
குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.11,98,41,028 /- மற்றும் டேவணித்தொகை (EMD): ரூ.11,19,84,103/-
ஏல தேதி & நேரம் : 25.08.2023 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை
ஏலம் நடைபெறும் இடம்: ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட், எண்.79/1A, 2வது தளம், பிரவீன் பிளாசா, சர் சண்முகம் ரோடு, RS புரம், கோயம்புத்தூர்-641002
தெரிந்தவரை வில்லங்கம்
விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநிதித்துவமும் அளிக்கவில்லை.
விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.religarefinvest.com
இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் மற்றும் தொலைபேசி எண்கள். Mr.K.N.பரமேஷ், Mobile No.8939605467 அல்லது மின்னஞ்சல்: paramesh.n@religare.com, மற்றும் Mr.A.வில்சன், Mobile No. 9311056699 அல்லது மின்னஞ்சல்: a.wilson@religare.com
தேதி : 11.07.2023
இடம் : கோயம்புத்தூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெலிகேர் பின்வெஸ்ட் லிட்

வரி விளம்பரங்கள்
பொது
பொது அறிவிப்பு

BEFORE THE COURT OF THE HON'BLE 6th ADDL. PRINCIPAL JDUGE, FAMILY COURT AT BANGALORE
M.C. No:4510/2021
Sri. Anil Kumar .J ... PETITIONER
-V/s-
Smt. Lavanya. K ... RESPONDENT
To, SMT. LAVANYA .K, aged about 26 years, W/o Anil Kumar .J, R/at: Diamond School Back side, Nallur Road, Bagalur Checkpost, Hosur Town - 635103. Krishnagiri District, Tamilnadu.
NOTICE
The Petitioner filed above case in M C NO:4510/2021 under section 13 (1) (ia) (ib) of H M Act on the file of 6th Additional Prl. Judge, Family Court at Bangalore, against you. You are avoiding to receive notice sent from court and by RPAD. Hence this notice is taken to you in newspaper for you to appear in person or through pleader on 16-08-2023 at 11:00 A.M before 6th Additional Prl. Judge Family Court, Bangalore to answer the suit made by him and on your failure to represent in the above case the Hon'ble court would proceed with the case placing you exparte.
Given under my hand and the seal of the court on 15-06-2023.
By order of the court, Sheristedar, Family Court, Bangalore.
Advocate for Petitioner:
Sri CHANDRA SHEKARIAH .S.B
No.1125, 3rd floor, 5th Cross, 5th Block, SMV Layout, Bangalore-560056.

திருநெல்வேலி மாநகராட்சி
15 வது மத்திய நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2022-23 ன் கீழ் மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 22/ 2023-24

1	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் & முகவரி	ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி			
2.	வேலையின் விபரம், மதிப்பீடு தொகை, முன் வைப்புத் தொகை மற்றும் பணிகளின் எண்ணிக்கை	பணி விபரம்	எண்ணிக்கை	மதிப்பீடு தொகை ரூ.கோடியில்	முன் வைப்புத் தொகை ரூ. இலட்சத்தில்
		பேவர் பிளாக் சாலை	3	2.01	2.01
		தார்ச்சாலை	2	1.657	1.657
		சிமெண்ட் கான்கிரீட் சாலை	1	0.635	0.635
3.	ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி	மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை கீழ்க்காணும் இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in			
4.	ஒப்பந்தப்புள்ளிகள் நமூனா இறக்கம் செய்தல்	14.07.2023 காலை 10 மணி முதல் 31.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை			
5.	ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல்	14.07.2023 காலை 10 மணி முதல் 31.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை			
6.	ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்	31.07.2023 பிற்பகல் 3.30 மணி.			

செ.ம.தொ.இ./ 3598 / ஒப்பந்தப்புள்ளி/2023
ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)
பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.
கிளை அலுவலகம் முகவரி : ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சேலம் - 636016.
மின்-ஏலம் அறிவிப்பு
2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.
கீழே கையொப்பமிட்ட ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொ